INTEGRATED VILLAGE DEVELOPMENT PROJECT
I.V.D.P
TOWARDS TRANSFORMATION • மாற்றத்தை நோக்கி
(Regd. No. 69/79)

# ஐ.வி.டி.பி மலர்

**மகளிர் சுய உதவிக்குழு புத்துணர்ச்சி இதழ்**


◈ மொட்டு 17 ◈ மலர் 45 ( தனிச்சுற்றுக்கு மட்டும் ) ◈ ஏப்ரல் 2023 - ஜூலை 2023




₹ 40 இலட்சம்

## ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் 610 குழந்தைகளுக்கு கோசலை தங்கப் பதக்க விருது





## நிறுவனர் இதயத்திலிருந்து...

### அன்பார்ந்த உறுப்பினர்களுக்கு

## *வாழ்த்துக்களும் வணக்கங்களும்...*

“சகிப்புத்தன்மை” இன்றைய காலக்கட்டத்தில் நமக்குத் தேவையான ஒன்று. நம் குடும்பங்களிலும், நாட்டிலும் நிலவும் அனைத்து பிரச்சினைகளுக்கும் மூலக்காரணம் இதுவேயாகும். இன்று இனத்தின் பெயராலும், மதத்தின் பெயராலும், மொழியின் பெயராலும் நடைபெற்று வரும் கலவரங்களுக்கெல்லாம் இதுவே அடிப்படை.

உள்ளே



4 ஐ. வி. டி. பி. கோசலை விருது



6 ஏழ்மை நிலையில் வாழும் பணியாளருக்கு வீடு



6 ஐ. வி. டி. பி. உறுப்பினர்களின் கவனத்திற்கு

பல நேரங்களில் இவற்றை கண்ணுறும் நாம், கண்டும் காணாமலும் கடந்து சென்று விடுகிறோம் அல்லது எதிர்வினையாற்ற தவறி விடுகிறோம். ஆனால் நம்மைச் சுற்றி நடப்பவை எல்லாம் நமக்கே நடக்கப்போகும் நாட்கள் வெகு தூரத்தில் இல்லை.

நம் உறுப்பினர்களுக்காக நாம் மேற்கொண்டு வரும் மார்பகம், கர்ப்பப்பை வாய், கருப்பை மற்றும் வாய் புற்றுநோய் கண்டறிதல் முகாம்கள் மூலம் ஆயிரக்கணக்கான உறுப்பினர்கள் பயனடைந்து வருகின்றனர். புற்றுநோயின் ஆரம்ப நிலை அறிகுறிகள் உள்ளவர்களுக்கும், புற்றுநோய் பாதிப்பு உள்ளவர்களுக்கும், ஐ.வி. டி. பி மூலம் பெங்களுர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக்கல்லூரி மருத்துவமனையின் சிறப்பு மருத்துவர்களைக் கொண்டு சிகிச்சையளித்து வருகிறோம். இச்சிகிச்சைகளுக்காகும் அனைத்து செலவினங்களையும் ஐ.வி. டி. பி நிறுவனமே ஏற்றுக் கொள்கிறது.

இக்காலாண்டில் நமது சுய உதவி குழுக்களுக்கு வங்கிக் கடன் வழங்கி வரும் வங்கிகளின் வரிசையில் பாரத ஸ்டேட் வங்கியும் இணைந்துள்ளது. இவ் வங்கி காவேரிப்பட்டினம், மாரண்டஹள்ளி கிளைகள் மூலம் நமது சுய உதவி குழுக்களுக்கு வங்கிச் சேவைகள் வழங்கி வருகிறது. ஐ.வி.டி.பி சார்பாக அவர்களை வாழ்த்தி வரவேற்கிறோம்.

ஆண்டுதோறும் அரசு பொதுத்தேர்வுகளில் சிறப்பிடம் பெறும் நம் உறுப்பினர்களின் குழந்தைகளுக்கு வழங்கி வரும் கோசலை விருது இவ்வாண்டும் 610 குழந்தைகளுக்கு வழங்கப்பட்டது. விருது பெற்ற அனைத்து குழந்தைகளுக்கும்

**வாழ்த்துக்களும்!!**
**பாராட்டுகளும்!!!**

இறுதியாக நம் பணியாளர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள். நீங்கள் வழிநடத்தும் சுய உதவிக் குழுக்களை இன்னும் திறம்பட செயல்படுத்துங்கள். புதிதாக துவங்கப்பட்ட குழுக்களை மேலும் வலுப்படுத்துங்கள். இதுவரை சென்றடையாத ஏழை மகளிரை குழுக்களில் இணைத்து அவர்களின் வாழ்வையும் வளமாக்க உதவுங்கள்.

**நன்றி**

என்றும் மக்கள் பணியில்

இராமன் மகசேசே
**குழந்தை பிரான்சிஸ்**
நிறுவனர் – தலைவர்

உள்ளே






11 ஐ. வி. டி. பி. கல்விப்பணிகள்
16 ஐ. வி. டி. பி. கல்விச்சேவைகள்
20 ஐ. வி. டி. பி. நிறுவனத்திற்கு நன்றி




# ஐ.வி.டி.பி. கோசலை விருது

## 2023

₹ 40 இலட்சம்



## ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களின் 610 குழந்தைகளுக்கு மடிக்கணினி மற்றும் தங்கப் பதக்க விருது




ஐ.வி.டி.பி மகளிர் சுய உதவிக்குழுக்களில் உள்ள உறுப்பினர்களின் குழந்தைகள் 10 மற்றும் 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறுவதை ஊக்குவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் ஐ.வி.டி.பி கோசலை விருது வழங்கப்பட்டு வருகின்றது.



இவ்வாண்டின் கோசலை விருது வழங்கும் விழா 23.07.2023 அன்று கிருஷ்ணகிரி, புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் 10ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற 8 மாணவ மாணவியருக்கு தலா **ரூ.22,552 /-** மதிப்பிலான 4 கிராம் தங்க நாணயங்களும், 12ஆம் வகுப்பு அரசு பொதுத்தேர்வில் சிறப்பிடம் பெற்ற 5 மாணவ, மாணவிகளுக்கு தலா. **ரூ.37,913/-** மதிப்பிலான **LENOVA** மடிக்கணினிகளும் வழங்கப்பட்டது.




மேலும் அரசு பொதுத்தேர்வில் **90%-க்கு** மேல் மதிப்பெண்கள் பெற்ற ஏனைய மாணவ மாணவியருக்கு தலா **ரூ.5638**/-மதிப்பிலான 1 கிராம் தங்க நாணயங்கள் விருதாக வழங்கப்பட்டது. 610 மாணவ மாணவியருக்கு வழங்கப்பட்ட பரிசுகளின் மொத்த மதிப்பு **ரூ.40 இலட்சம்** ஆகும்

## ஐ.வி.டி.பி கோசலை விருது திட்டத்திற்காக இதுவரை வழங்கியுள்ள மொத்தத் தொகை

**₹ 4.69 கோடி**

## ஏழ்மை நிலையில் வாழும் பணியாளருக்கு **வீடு**

₹ 2.00 இலட்சம்



ஐ.வி.டி.பி நிறுவனம், பணியாளர் மேம்பாட்டிற்காக வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் பணியாளர்களுக்கு பல்வேறு நல உதவிகளை வழங்கி வருகிறது. அவ்வகையில் அனுமந்தபுரம் கிளையைச் சார்ந்த **கே.ஜி. முத்து** என்பவருக்கு சொந்த வீடு கட்டி கொள்வதற்காக **ரூ. 2 இலட்சத்தை** வழங்கி உதவினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர்.

## ஐ.வி.டி.பி பணியாளர்களுக்கு புதிய ஓவர் கோட்



₹ 1.28 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் 475 பணியாளர்களுக்கு கோடை காலங்களில் உடுத்திக்கொள்ளும் வகையில் **ரூ.1.28 இலட்சம்** மதிப்பிலான ஓவர் கோட்டுகள் வழங்கப்பட்டது.

## குழு உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் நிதியுதவி மாற்றங்கள்

### 1. ஐ.வி.டி.பி யின் தீ விபத்து (வீடு) நிதியுதவி

ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்களின் வீடுகளில் தீ விபத்து ஏற்பட்டு பொருட்சேதம் ஏற்படும் நிலையில் அவர்களுக்கு தீ விபத்து நிதியுதவியாக **ரூ.10000/-** என வழங்கப்பட்டு வந்தது. தற்போது ஐ.வி.டி.பியின் தீ விபத்து நிதியுதவி **ரூ.25000/-** ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

### 2. விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை

விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித்தொகை **ரூ.10000/-**லிருந்து **ரூ.12500/-** ஆக உயர்த்தப்பட்டுள்ளது.



"கொடுத்துக் கொண்டே இரு. நீயார் என்று பிறருக்குத் தெரியும், கொடுப்பதை நிறுத்திவிடு. அவர்கள் யார் என்று உனக்குத் தெரியும்."

# கீரனூர் - மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு வாட்டர் பாட்டில்கள்

₹ 1.00 இலட்சம்



புதுக்கோட்டை மாவட்டம், கீரனூர் தொன் போஸ்கோ இளைஞர் கிராமத்தின் கீழ் செயல்படும் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களை ஊக்கப்படுத்தும் வகையில் **1000** உறுப்பினர்களுக்கு தலா **ரூ.100/-** என மொத்தம் **ரூ.1 இலட்சம்** மதிப்பிலான வாட்டர் பாட்டில்களை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

# வங்கிக் கடன் CLOSE செய்யும் போது கடைப்பிடிக்க வேண்டிய வழிமுறைகள்

- வங்கிக் கடன் Close செய்யும் மாதத்தில் குழுக் கூட்டத்திற்கு முன்னதாகவே வங்கிக்கு சென்று Closing தொகையைக் கேட்டு தெரிந்து கோள்ள வேண்டும்.
- வங்கியில் கணக்கிட்ட தொகைக்கு மேல் அதிகபட்சம் ரூ.50 வரை தான் உறுப்பினர்களிடம் அதிகமாக வசூல் செய்ய வெண்டும். வசூல் செய்த தொகையை குழுக் கூட்டத்திலேயே தீர்மானப் புத்தகத்தில் பதிவு செய்ய வேண்டும்.
- உறுப்பினர்களிடம் வசூல் செய்த முழு தொகையும் வங்கி கணக்கில் செலுத்த வேண்டும். அப்படி செலுத்தப்பட்ட தொகையிலிருந்து Loan Closing போக மீதமுள்ள தொகையை குழுவின் தீர்மானத்துடன் குழுக்கணக்கிலிருந்து உறுப்பினர்களுக்கு எடுத்து தர வேண்டும் அல்லது வசூல் செய்த தொகையை விட Loan Closing தொகை அதிகமாக இருந்தால் அடுத்த குழுக் கூட்டத்தில் வசூல் செய்து குழுக் கணக்கில் செலுத்த வேண்டும்.
- எக்காரணத்தைக் கொண்டும் உறுப்பினர்களிடம் அதிகமாக வசூல் செய்து பணத்தை ஊக்குனர் கையில் வைத்திருக்க கூடாது.
- எந்த பணமாக இருந்தாலும் குழுக் கூட்டத்தில் மட்டுமே வசூல் செய்ய வேண்டும். மற்ற நேரங்களில் வசூல் செய்யக் கூடாது.

# ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களின் கவனத்திற்கு

- ஒவ்வொரு மாதமும் ஐ.வி.டி.பி சுய உதவிக்குழுக்களுக்கு நடைபெறும் ஊக்குனர் ஆய்வுக் கூட்டத்தில் ஊக்குனர் கலந்துக் கொள்ள இயலாத சூழல் ஏற்படும் நிலையில், அந்த மாதம் ஊக்குனர் ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொள்ளும் குழுவைச் சேர்ந்த உறுப்பினருக்கும், ஊக்குனருக்கும் அந்த மாதத்தின் GMF (ஊக்கத்தொகை) சரிசமமாகப் பிரித்து வழங்கப்படும்.
- ஊக்குனர் ஆய்வுக் கூட்டத்திற்கு ஊக்குனர் (அ) உறுப்பினர்கள் யாரும் கலந்துக் கொள்ளவில்லையெனில் அந்த குறிப்பிட்ட மாதத்திற்கான ஊக்கத்தொகை வழங்க இயலாது.
- வங்கிக் கடன் பயனாளிகள் தேர்வு (Appraisal) முடிந்த பிறகு, தலைமை அலுவலகத்தில் நடைபெறும் ஊக்குனர் கலந்தாய்வுப் பயிற்சியில் ஊக்குனர் கலந்துக் கொள்ளாமல், உறுப்பினர்கள் யாரேனும் கலந்துக் கொண்டால், அந்த மாதத்திற்கான ஊக்கத்தொகை ஊக்குனர் கலந்தாய்வுப் பயிற்சியில் கலந்துக் கொண்ட உறுப்பினருக்கும், ஊக்குனருக்கும் சரிசமமாகப் பிரித்து வழங்கப்படும்.
- பணியாளர்கள் வாரியாக 26, 27, 28 –ஆம் தேதிகளில் ஒதுக்கப்பட்ட ஆய்வுக் கூட்ட நேரத்தில் தான் ஊக்குனர் கலந்துக் கொள்ள வேண்டும். அன்று கலந்துக் கொள்ளாதவர்கள் 29 & 30 ஆம் தேதிகளில் வந்து பதிவேடுகளைச் சரிபார்த்து கொண்டாலும் Review meeting Attendance – ல் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது
- ஊக்குனர் ஆய்வுக் கூட்டத்திற்கு வரும் பொழுது கண்டிப்பாக தீர்மானப் புத்தகம், பொதுப்பேரேடு, SB / Loan பாஸ் புத்தகம் போன்றவற்றை கண்டிப்பாக கொண்டு வர வேண்டும்.

## ஊக்குனர்களின் கடமைகள்

- குழுக் கூட்டம் அக்குழுவிற்கென ஒதுக்கப்பட்ட சரியான நேரத்தில் முறையாக நடைபெற வேண்டும்.
- குழுவிற்கு களப்பணியாளர்கள் நேரம் தவறி வந்தாலும் அல்லது வராமல் இருந்தாலும் தலைமை அலுவலகத்திற்கு ஊக்குனர் அல்லது உறுப்பினர்கள் தகவல் கொடுக்க வேண்டும்.
- குழுக் கூட்டத்தில் வசூல் செய்த பணத்தை வங்கியில் செலுத்திய பின்பு வங்கிக் கணக்கு புத்தகத்தில் வரவு வைத்து, ஊக்குனர் ஆய்வுக் கூட்டத்தில் சரிபார்த்து கொள்வது ஊக்குனர்களின் பொறுப்பாகும்.
- தலைமை அலுவலகத்திலிருந்து கொடுக்கப்படும் ஐ.வி.டி.பி மலர், நோட்டீஸ் மற்றும் அனைத்து தகவல்களையும் குழுவில் உள்ள உறுப்பினர்களுக்கு படித்து காட்டுவது ஊக்குனர்களின் கடமையாகும்.
- ஐ.வி.டி.பி கடன் பெறும் உறுப்பினர்களை 15 நாட்களுக்குள் கிளை அலுவலகத்தில் உள்ள Voucher ல் கையொப்பம் இடச் செய்ய வேண்டும்.
- அந்தந்த மாதத்திற்குரிய ஐ.வி.டி.பி கடன் – ரசீதை கிளை அலுவலகத்திலோ அல்லது பணியாளர்களிடமோ கேட்டு பெற்று உறுப்பினர்களுக்கு படித்துக் காட்டி தீர்மானப் புத்தகத்தில் ஒட்டுவது ஊக்குனர்களின் கடமையாகும். அதில் ஏதாவது வேறுபாடு இருந்தால் உடனடியாக கிளை அலுவலகம் (அ) தலைமை அலுவலகத்திற்கு தகவல் தெரிவிக்க வேண்டும்.



# ஐ.வி.டி.பி
## உறுப்பினர்களுக்கான புற்றுநோய் கண்டறியும் மருத்துவப் பரிசோதனை முகாம் & இலவச மருத்துவச் சிகிச்சை

## ஐ.வி.டி.பி நிறுவனம்

KARKINOS – COCHIN

ST.JOHNS MEDICAL COLLEGE - BANGALORE

ST.LOUIS HOSPITAL - KRISHNAGIRI

**நிறுவனங்களோடு இணைந்து, ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு கருப்பை புற்றுநோய், வாய் புற்றுநோய், மார்பகப் புற்றுநோய் மற்றும் கருப்பை வாய் புற்றுநோய் போன்ற புற்றுநோய்களை கண்டறியும் மருத்துவப் பரிசோதனை முகாமினை நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.**

**இது வரை 6 கட்டங்களாக ஐ.வி.டி.பி சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு ஆரம்ப நிலை புற்றுநோய் கண்டறிதல் முகாம்கள் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. அதில் பங்கேற்று பயனடைந்தவர்கள் விவரம்**

| முகாம்கள் | பங்கேற்றவர்கள் எண்ணிக்கை | கருப்பை புற்றுநோய் அறிகுறிகள் உள்ளவர்களின் எண்ணிக்கை | மார்பகம் மற்றும் வாய் புற்றுநோய் அறிகுறிகள் உள்ளவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| முதற் கட்டம் | 495 | 44 | 17 |
| இரண்டாம் கட்டம் | 798 | 80 | 32 |
| மூன்றாம் கட்டம் | 887 | 80 | 99 |
| நான்காம் கட்டம் | 700 | 83 | 54 |
| ஐந்தாம் கட்டம் | 721 | 63 | 83 |
| ஆறாம் கட்டம் | 997 | 103 | 46 |
| மொத்தம் | 4598 | 453 | 331 |

இம்முகாமின் வாயிலாக 453 உறுப்பினர்களுக்கு கருப்பை புற்றுநோய் அறிகுறிகளும், 331 உறுப்பினர்களுக்கு மார்பகம் மற்றும் வாய் புற்றுநோய் அறிகுறிகளும் கண்டறியப்பட்ட நிலையில், அந்த உறுப்பினர்களிடமும், அவர்கள் குடும்பத்தாரிடமும் நோயின் நிலையினை எடுத்துரைத்து, அவர்களை மேல் சிகிச்சைக்கு வருமாறு கேட்டுக் கொண்டது நமது ஐ.வி.டி.பி நிறுவனம்.

அடுத்த நிலையில் நடைபெற்ற மேல் சிகிச்சையில் அறிகுறிகள் காணப்பட்ட 784 உறுப்பினர்களுக்கும், கிருஷ்ணகிரி புனித லூயிஸ் மருத்துவமனையில் வைத்து, பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் சிறப்பு புற்றுநோய் மருத்துவர்களை வரவழைத்து பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டது. கருப்பை புற்றுநோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு **Colposcopy, Biopsy, Thermal Ablation** மற்றும் **Leep** போன்ற சிகிச்சை முறைகளும், மார்பகப் புற்றுநோய் அறிகுறிகள் உள்ளவர்களுக்கு Memogram, FNAC, Scan போன்ற சிகிச்சை முறைகளும் மேற்கொள்ளப்பட்டது. இதுமட்டுமில்லாமல் தேவைக்கேற்ப **Blood Test, Scan, X ray** போன்றவையும் எடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்த பரிசோதனையின் மூலம் புற்றுநோய் இருப்பவர்கள் மற்றும் புற்றுநோய்க்கான வாய்ப்புகள் அதிகம் என கண்டறியப்பட்ட உறுப்பினர்களை மேல்சிகிச்சைக்காக பெங்களூர் செயின்ட் ஜான்ஸ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு, மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்பட்ட ஒரு உறுப்பினருக்கு அறுவைச்சிகிச்சையின் மூலம் மார்பகத்தை நீக்கிவிட்டு, செயற்கை மார்பகம் பொருத்தப்பட்டது. மற்றொரு உறுப்பினருக்கு மார்பகத்தில் உள்ள கட்டிகள் அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கப்பட்டது.

மேலும் கருப்பை புற்றுநோய்க்கான வாய்ப்பிருக்கும் **9 உறுப்பினர்களுக்கு** அறுவை சிகிச்சையின் மூலம் கர்ப்பப்பை நீக்கப்பட்டது. புற்றுநோய்க்கான அறிகுறிகள் உள்ள மற்ற உறுப்பினர்கள் அனைவரும் தொடர் சிகிச்சையில் உள்ளனர். தற்போது அறுவைச்சிகிச்சை செய்து கொண்ட உறுப்பினர்கள் நலமுடன் உள்ளனர்.

கார்கினோஸ் நிறுவனம் நடத்தும் தொடக்க நிலை மருத்துவப் பரிசோதனை முகாமிற்கான கட்டணம் **ரூ.1600/-** ஐ உறுப்பினர்களே ஏற்றுக்கொள்ளும் நிலையில், அடுத்தக்கட்ட மருத்துவச் சிகிச்சைகளான **Colposcopy, Biopsy, Thermal Ablation, Leep, Memogram, FNAC, Scan, Cone Biopsy** பரிசோதனை, மார்பகம் மற்றும் கர்ப்பப்பை அகற்றுதலுக்கான அறுவைச்சிகிச்சை செலவுகள், மருத்துவமனை செலவுகள் அனைத்தையும் ஐ.வி.டி.பி நிறுவனமே ஏற்றுக்கொண்டது குறிப்பிடத்தக்கது.






"முடியாது என்பதை பிறகு சிந்தியுங்கள், எப்படி முடிப்பது என்பதை முதலில் சிந்தியுங்கள், வெற்றி நிச்சயம்."

# அரசுப் பள்ளி மாணவர்களை நூலக உறுப்பினர்களாக்கும் திட்டத்திற்கு ஐ.வி.டி.பி யின் பங்களிப்பு

₹ 12 இலட்சம்




கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள அரசு நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் ஒரு இலட்சம் மாணவ மாணவியரின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் திட்டத்தின் ஒரு பகுதியாக, **60000 பள்ளி மாணவ மாணவியரை** நூலக உறுப்பினர்களாக்கும் திட்டத்திற்கு, ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பங்களிப்பாக அம்மாணவ மாணவியரின் ஆண்டு சந்தாவாக தலா **ரூ.20/- வீதம் ரூ.12 இலட்சத்தை** வழங்க ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் ஒப்புதல் வழங்கியிருந்தார்.

அதன்படி கிருஷ்ணகிரி அரசு மருத்துவக்கல்லூரி கூட்டரங்கில், கிருஷ்ணகிரி மாவட்ட பள்ளிக் கல்வித்துறையுடன் இணைந்து கல்வியாளர்கள் சங்கம் நடத்திய **ஆசிரியர்களுடன் அன்பில் (நம்மில் ஒருவர்)** நிகழ்ச்சியில், ஐ.வி.டி.பி நிறுவனத்தின் பங்களிப்பான **ரூ.12 இலட்சத்திற்கான** காசோலையை, மாண்புமிகு உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.**அர.சக்கரபாணி** அவர்களிடம் வழங்கினார் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. **கே.எம்.சரயு** இ.ஆ.ப., அவர்கள், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் திரு.**தே.மதியழகன்,** சந்திராயன் திட்ட இயக்குநர் திரு. **மயில்சாமி அண்ணாதுரை,** ஆசிரியர் மனசு திட்ட ஒருங்கிணைப்பாளர் திரு.**சிகரம் சதீஸ்குமார்,** மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் திருமதி.**கே.பி.மகேஸ்வரி** ஆகியோர் உடனிருந்தனர்.

காசோலையைப் பெற்றுக்கொண்ட உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர், ஐ.வி.டி.பி யின் பங்களிப்புக்கு தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவருக்கு நினைவுப்பரிசு வழங்கி கௌரவித்தார்.



"தேவைகளையும், எதிர்பார்ப்புகளையும் எவ்வளவுக்கு எவ்வளவு குறைத்துக் கொள்கிறோமோ, அவ்வளவுக்கு அவ்வளவு மகிழ்ச்சி நிச்சயம்."










# ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவரின் பூடான் பயணம்













“சலித்து கொள்பவன் ஒவ்வொரு வாய்ப்பிலும் உள்ள ஆபத்தைப் பார்க்கிறான். சாதிப்பவன் ஒவ்வொரு ஆபத்திலும் உள்ள வாய்ப்பினைப் பார்க்கிறான்.”

# கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளிக்கு பாடப்புத்தகங்கள்

₹ **5.94** இலட்சம்

கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி மெட்ரிக் பள்ளியில் மலை கிராமங்களில் உள்ள ஏழை எளிய குழந்தைகள் படிப்பதால், அக்குழந்தைகளுக்கு தேவையான பாடப்புத்தகங்களையும், நோட்டுப் புத்தகங்களையும் ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கி வருகிறது. அங்ஙனம் இவ்வாண்டும் 1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பயிலும் 480 மாணவ மாணவியருக்கு **ரூ.1.50 இலட்சம்** மதிப்பிலான பாடப்புத்தகங்களையும், **ரூ.4.44 இலட்சம்** மதிப்பிலான நோட்டுப்புத்தகங்களையும், ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் அவர்கள் வழங்கினார்.



கோட்டையூர் ஐ.வி.டி.பி நேதாஜி பள்ளி இதுவரை LKG வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை இயங்கும் மெட்ரிக் பள்ளியாக செயல்பட்டு வந்தது. தற்போது தரம் உயர்த்தப்பட்டு 12 ஆம் வகுப்பு வரை இயங்கும் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியாக செயல்பட்டு வருகின்றது.

# அரசுப் பள்ளியில் பயின்று மருத்துவப் படிப்பில் சேர்ந்த 6 மாணவர்களுக்கு ஊக்கத்தொகை & பரிசுகள்

₹ **1.49** இலட்சம்



அரசுப்பள்ளிகளில் 12 ஆம் வகுப்பில் படித்து NEET பயிற்சி தேர்வில் சிறப்பான முறையில் வெற்றி பெற்று அரசு மருத்துவக் கல்லூரிகளில் மருத்துவப் படிப்பில் சேர்ந்த **6 மாணவர்களுக்கு தலா ரூ.20,000/** ஊக்கத்தொகை மற்றும் **தலா ரூ.4,880/- மதிப்பிலான 1 கிராம் தங்க நாணயங்கள்** என ஒவ்வொரு மாணவருக்கும் தலா **ரூ.24,880/-** மதிப்பில், மொத்தம் **ரூ.1.49 இலட்சம் மதிப்பிலான** ஊக்கத்தொகைகளையும், பரிசுகளையும் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் வழங்கினார்.



"யாரையும் பகைத்துக் கொள்ளாமல் இருக்க முடியும் என்றால் நடித்துக் கொண்டு தான் இருக்க முடியும்".



₹ 1.60 இலட்சம்

## உம்மியம்பட்டு அரசு நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு விளையாட்டுச் சீருடைகள் மற்றும் நாட்குறிப்பேடுகள்

தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம் தொப்பூர் ஊராட்சிக்குட்பட்ட உம்மியம்பட்டு அரசு நடுநிலைப் பள்ளியில் 1 ஆம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை 340 மாணவ மாணவிகள் பயின்று வருகின்றனர். இம்மாணவ மாணவியரின் நலன் கருதி, 2023-24 ஆம் கல்வியாண்டுக்கு **ரூ.130462/-** மதிப்பிலான விளையாட்டுச் சீருடைகள் மற்றும் **ரூ.29736/-** மதிப்பிலான நாட்குறிப்பேடுகள் என மொத்தம் **ரூ.1.60 இலட்சம்** மதிப்பிலான கல்வி உதவிகளை ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே திரு.குழந்தை பிரான்சிஸ் அவர்கள் வழங்கி உதவினார்.

## ஏழை எளிய மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை

₹ 1.54 இலட்சம்

ஐ.வி.டி.பி நிறுவனம், பல்வேறு கல்லூரிகளில் பயிலும் ஏழை எளிய மாணவர்கள் மற்றும் பெற்றோர்களை இழந்த **9 மாணவர்களுக்கு** கல்வி உதவித்தொகையாக **ரூ.1.54 இலட்சம்** வழங்கியது.



"ஒருவருக்கு உதவுவதன் மூலம் இந்த உலகத்தை உன்னால் மாற்றி விட முடியாது.
ஆனால் ஒருவருக்கு உதவுவதன் மூலம் அவருடைய உலகத்தை உன்னால் மாற்ற முடியும்."

# கிருஷ்ணகிரி ஆர். சி. பாத்திமா ஆண்கள் உயர் நிலைப்பள்ளிக்கு பேவர் பிளாக் தரை




₹ 5 இலட்சம்



**கிருஷ்ணகிரி, ஆர். சி. பாத்திமா ஆண்கள் உயர் நிலைப்பள்ளி** வளாகத்தை தூய்மையாக பராமரிக்க ஏதுவாகவும், மாணவர்களின் சுகாதாரத்தைக் கருத்தில் கொண்டும் அப்பள்ளிக்கு **ரூ. 5 இலட்சம்** மதிப்பிலான பேவர் பிளாக் தரை வசதியை வழங்கியது ஐ.வி.டி.பி நிறுவனம்.

# ஊத்தங்கரை அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்கு விளையாட்டு உபகரணங்கள்

₹ 29 ஆயிரம்



ஊத்தங்கரை, **அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி** மாணவ மாணவிகளின் கல்வி வளர்ச்சி மற்றும் உடல் நலனில் அக்கறைக் கொண்டு, அப்பள்ளிக்கு தேவையான விளையாட்டு உபகரணங்களை ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் இராமன் மகசேசே **திரு. குழந்தை பிரான்சிஸ்** அவர்கள் நேரில் சென்று வழங்கினார்.

இதில் பள்ளியின் பங்களிப்பாக **ரூ. 27650/-** ஐ.வி.டி.பி யின் பங்களிப்பாக **ரூ. 29160/-** என மொத்தம் **ரூ.56810/-** மதிப்பிலான விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.



"அறிவு என்பது படிப்பறிவைச் சார்ந்தது அல்ல. நமக்கு கிடைத்த அனுபவத்தையும், சூழ்நிலையையும் வைத்து எதிர்காலத்தை கையாளும் தன்மைக்கு பெயர் அறிவு."

# மும்பை தொழுநோய் காலனி பள்ளி ஆசிரியர்கள் தமிழ்நாடு வருகை







₹ 5.50 இலட்சம்






மகாராஷ்டிரா மாநிலம், மும்பையைச் சார்ந்த அலர்ட் இந்தியா **(Alert India)** நிறுவனம் பணியாற்றி வரும் மும்பை தொழு நோயாளர் காலனியில் செயல்படும் அபினவ் தன்யன் மந்திர் பொது அறக்கட்டளையைச் சார்ந்த பள்ளியில் 400 மாணவ மாணவியர்கள் கல்வி பயின்று வருகின்றனர். இத்தொழு நோயாளர் காலனியில் வசிக்கும் பெரும்பாலானோர் தமிழகத்திலிருந்து புலம் பெயர்ந்து சென்றவர்களாவர்.

மும்பை தொழு நோயாளர் காலனி பள்ளியின் ஆசிரியர்கள் தமிழ்நாட்டில் உள்ள கோவில்களைப் பார்க்க விரும்பியதன் விளைவாக, அவர்கள் ஐ.வி.டி.பி நிறுவனத்திற்கு வரவழைக்கப்பட்டு, அவர்கள் திருப்பதி வெங்கடாஜலபதி கோயில், மதுரை மீனாட்சியம்மன் கோயில், தஞ்சை பெருவுடையார் கோயில் போன்ற கோவில்களுக்கு சென்று வர அவர்களுக்கு தேவையான ஏற்பாடுகளைச் செய்து தந்தது ஐ.வி.டி.பி நிறுவனம். அவர்களின் தமிழக வருகைக்காக ஐ.வி.டி.பி நிறுவனம் **ரூ.5.50 இலட்சம்** செலவிட்டுள்ளது.

ஐ.வி.டி.பி நிறுவனம், மும்பை தொழு நோயாளர் காலனி பள்ளிக்கு கணினி ஆய்வகம் மற்றும் ஆசிரியர்களுக்கு ஊக்கப்பரிசுகளுக்கென இதுவரை **ரூ.12.90 இலட்சம்** செலவிட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஆசிரியர்களை ஊக்கப்படுத்த

# கல்விச் சுற்றுலா

₹ 2.04 இலட்சம்

"ஆசிரியப் பணியே அறப்பணி! அதற்கே உன்னை அர்ப்பணி!"

என்பர். அவ்வகையில் ஆசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இவ்வாண்டு ஆசிரியர்கள் கல்விச் சுற்றுலா செல்ல ஐ.வி.டி.பி நிறுவனம் உதவியது.





வேலூர் அக்சீலியம் கல்லூரியின் வணிக நிர்வாகத் துறையின் வெள்ளி விழாவை முன்னிட்டு, அத்துறையைச் சார்ந்த பேராசிரியர்களை ஊக்கப்படுத்தும் வகையில் கல்விச் சுற்றுலாவிற்கு

₹ 1.00 இலட்சம்

கிருஷ்ணகிரி புனித அன்னாள் மகளிர் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர்களின் கல்விச் சுற்றுலாவிற்கு (ஊட்டி)

₹ 44 ஆயிரம்

கிருஷ்ணகிரி புனித அன்னாள் நர்சரி மற்றும் துவக்கப் பள்ளி ஆசிரியர்களின் கல்விச் சுற்றுலாவிற்கு (கேரளா)

₹ 60 ஆயிரம்



"வாழ்க்கை என்பது ஒரு கால்பந்து போல, நீங்கள் ஒரு கோல் அடிப்பதற்கு 10 பேர் உதவவும், 11 பேர் எதிர்க்கவும் செய்வார்கள்."

கிருஷ்ணகிரி விளையாட்டு மேம்பாட்டு ஆணைய **ஜூடோ** மாணவர்கள் ஐ.வி.டி.பி நிறுவனம் வழங்கிய விளையாட்டு உபகரணங்களைப் பயன்படுத்தி பயிற்சி எடுத்ததன் விளைவாக தாங்கள் பெற்ற வெற்றியை, ஐ.வி.டி.பி நிறுவனரைச் சந்தித்து கோப்பை மற்றும் சான்றிதழ்களைக் காண்பித்து வாழ்த்துப் பெற்றனர்.





## கிருஷ்ணகிரி புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளி மாணவியருக்கு ஊக்கப்பரிசு

₹ 25 ஆயிரம்




கிருஷ்ணகிரி புனித அன்னாள் பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற கோசலை விருது வழங்கும் விழாவில், கலை நிகழ்ச்சியில் நன்முறையில் நடனமாடிய மாணவியரை ஊக்கப்படுத்தும் வகையில் **ரூ.25000/-** மதிப்பிலான **50 குடைகளை** மாணவியருக்கும், அவர்களை வழிநடத்திய ஆசிரியர்களுக்கும் ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் வழங்கினார்.



"வார்த்தைகளை உதிர்க்கும் போது ஒரு முறை யோசித்துப் பாருங்கள். வார்த்தைகள் ஒருவேளை மன்னிக்கப்படலாம். ஆனால் ஒரு போதும் மறக்கப்படுவதில்லை."



# ஐ.வி.டி.பி நிறுவனருக்கு நன்றி தெரிவித்த வசந்த மலர்கள் குழு உறுப்பினர்கள்

**திருப்பத்தூர் மாவட்டம், மாக்கனூர் கிராமத்தில் வசந்த மலர்கள்** எனும் பெயரில் மகளிர் சுய உதவிக்குழுவில் 8 வருடங்களாக உறுப்பினராக இருந்த **திருமதி.குமாரி** என்பவர் கடந்த 19.01.2023 அன்று மாரடைப்பு காரணமாகவும், அவருடைய கணவர் **திரு.ராமசாமி** என்பவர் கடந்த 23.06.2023 அன்று மஞ்சள் காமாலை நோய் காரணமாகவும் இயற்கை எய்தியதை அறிந்த ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் அவர்கள், இறந்த உறுப்பினரின் குழந்தைகளாகிய **ஹரிஹரன்** மற்றும் **தினேஷ்** ஆகியோரின் கல்விச் செலவை முழுவதுமாக ஐ.வி.டி.பி நிறுவனமே ஏற்கும் என்று கூறியதையறிந்து, அக்குழுவின் உறுப்பினர்கள் ஐ.வி.டி.பி நிறுவனருக்கு தங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து கூறியதாவது,

ஐ.வி.டி.பி நிறுவனத்தின் கீழ் எங்கள் வசந்த மலர்கள் குழுவானது கடந்த 8 வருடங்களாக இயங்கி வருகிறது. எங்கள் குழுவில் திருமதி. குமாரி என்பவர் உறுப்பினராக இருந்து வந்தார். இவருக்கு 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். இவர் கடந்த 19.01.2023 அன்று மாரடைப்பு காரணமாக இறந்து விட்டார். அவருடைய குடும்ப சூழ்நிலையறிந்து அவரது கடன் தவணையை குழு உறுப்பினர்களே இரண்டு மாதம் கட்டினோம். பிறகு அவருடைய கணவர் ராமசாமியும் கடந்த 23.06.2023 அன்று மஞ்சள் காமாலை நோய் காரணமாக இறந்து விட்டார். இச்சூழ்நிலையில் அவர்களுடைய 2 குழந்தைகளும் திக்கற்று நிற்பதைக் கண்டு அவர்களுக்கு உதவிடும் வகையில் அவர்களுள் மூத்த மகனின் கல்லூரிக் கட்டணத்தை குழு உறுப்பினர்களே கட்டி வந்தோம். அவர்களின் இரண்டாவது மகன் பனிரெண்டாம் வகுப்பு முடித்த சூழ்நிலையில் அவரின் மேற்படிப்பிற்கு உதவிடுமாறு ஐ.வி.டி.பி நிறுவனரை அணுகினோம். இக்குழந்தைகளின் சூழ்நிலையறிந்த ஐ.வி.டி.பி நிறுவனர் இரண்டாவது மகன் தினேஷ்-க்கு அவர்களின் வீட்டருகே உள்ள திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரியில் அட்மிஷன்(பி.காம்) பெற்று கல்லூரியில் சேர்த்து, அவரின் கல்லூரிக் கட்டணத் தொகையை உடனடியாக வழங்கியதோடு மட்டுமில்லாமல், அவர்கள் இருவரின் கல்விக் கட்டணத்தை முழுவதுமாக தானே ஏற்று கொள்வதாகவும் தெரிவித்தார். அதோடு மட்டுமில்லாது அந்த இரண்டு பிள்ளைகளுக்கும் தேவையான உடை, காலணிகள் போன்றவற்றையும் வழங்கி அவர்களுக்கு ஊக்கமூட்டினார். தாய் தந்தையில்லா பிள்ளைகளுக்கு தாயாகவும் தந்தையாகவும் இருந்து உதவிய ஐ.வி.டி.பி நிறுவனத் தலைவர் ஐயா அவர்களுக்கு எங்கள் குழு உறுப்பினர்கள் அனைவரின் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## நன்றி ஐயா!!!

# கவிச்சந்தம்

## தலை சிறந்த தந்தையும் நீரே! தலைவரும் நீரே!

வரவேற்பு அறையில்
எண்ணிலடங்காப் பரிசுகள்
நூறு தாய்கள் பெற்ற
பிள்ளைகள் பெற வேண்டிய
பரிசுகள் அனைத்தும்
ஒரு தாய் வயிற்று பிள்ளை நீர்
பெற்ற பரிசுகள் கண்டு வியந்தேன்!
கடைசியாய் வரும் உறுப்பினரின்
வயிறும் பசியோடு இருக்கக் கூடாது என
வருகை பதிவேட்டின் நேரத்தை
அதிகமாக்கி உணவு சமைக்க
அனுமதி கொடுக்கும் உம் விருந்தோம்பல்
என் அன்னையை நினைவுப்படுத்தியது
அறுசுவை உணவு என்பார்கள்!
அதனை ஐ.வி.டி.பி யில் கண்டேன்
போதும் என்ற அளவிற்கு உணவு உபசரிப்பு
யார் கொடுப்பார் என் போன்றோர்க்கு
தாயன்பு படைத்த உங்களால் மட்டுமே முடியும்!
எங்கள் உள்ளம் வாழ்த்துகிறது! மனதார
உங்கள் விருந்தோம்பல் கண்டு!
தாய் போன பின்பு சீர் போகும் என்பார்கள்
எங்கள் ஐ.வி.டி.பி இருக்கும் வரை எங்கள் சீர்
சமுதாயத்தில் உயரும் என்பது உறுதி!
ஆயரம் ரூபாய்க்கு தவணை முறையில்
சேலை வாங்கினேன் அழகாய் இருந்தது
ஆனால் அதிக நேரம் உடுத்த முடியவில்லை
காரணம் காற்று உடலில் நுழைய மறுக்கிறது
எங்கள் ஐ.வி.டி.பி யில் கொடுத்த சேலையில்
மெத்தென்ற சுகம் கண்டேன்!
காரணம் அதில் பெண்களின் உணர்வுகள்
புரிந்து நெய்யப்பட்டதால்!
எங்கள் வாழ்வு உயர
சங்கக்கடன் சிறப்புக்கடன் வங்கிக்கடன் வாங்கிய
பிறகும் பற்றாக்குறை வரும் போது
யாரிடமும் யாசிக்காதீர்
நான் தரும் தங்கத்தைப் பெற்று
சுயமாய் செயல்படுங்கள் என தங்கத்தை தரும்
தலை சிறந்த தந்தையும் நீரே! தலைவரும் நீரே!
வாழ்க வாழ்க பல்லாண்டு என வாழ்த்த வயதில்லை
நீர் துவங்கிய ஐ.வி.டி.பி எனும் தொண்டு நிறுவனம்
பல்வேறு ஆண்டுகள் செயல்பட வேண்டும்
என வணங்குகிறோம்!!!

**சித்ரா,** ஊக்குனர்
ஸ்ரீ ராதை மகளிர் மன்றம்,
ஆம்பூர்.

## வாழ்ந்து கொண்டிருக்கிறது மனிதம்!

செம்பரிதி கீழ்வானில் உதித்திட்டாற் போல்
தென்றலது பொதிகையினில் புறப்பட்டாற் போல்
தும்பைமலர் தூய்மையாய் மலர்ந்திட்டாற் போல்
தொடுவானில் விண்ணிலவு தவழ்ந்திட்டாற் போல்
நம்முடைய தலைவரவர் சேலத்தின் கண் காரிப்பட்டிதனில்

நலமுடனே குழந்தை மதலைமேரி தம்பதியினர்
உருவமாய் அழகில் கண்டெடுத்து
உறவாய் உலகில் அடியெடுத்து
கர்வமாய்க் காற்றில் இசைத்து
குழந்தை பிரான்சிஸ் எனும் பெயரில்
காவியமாய் பிறப்பித்த தங்க மகன்!

மாலவனை மறையவனைத் தொழுததில்லை
மக்களுக்குத் தொண்டாற்றல் மேன்மை என்றுணர்ந்து
ஆல்விழுதாய் நலத்திட்டப் பணிகளாலே
அடுக்கடுக்காய் நன்மையெல்லாம் வையம் காண
ஐ.வி.டி.பி தொண்டு நிறுவனம் துவங்கி
ஏழையின் சிரிப்பில் இறைவனைக் கண்டவர்!

ஓயாத உறங்காத சோர்வறியாச் சூரியனாய்
சீரார்ந்த நல்வாழ்வை மக்கள் எய்தச்
சிந்தித்தே அருங்செயல்கள் பலவும் செய்பவர்!
கலங்கி நின்ற உழவர்கள் களிப்பு நல்க
நாட்றாம்பாளையம் பகுதியில் தடுப்பணைகள் கட்டியவர்
மகளிரின் உரிமை காத்த மணிமேகலையாய்
மகளிர் சுய உதவிக்குழுக்களை அமைத்து
அவர்கள் வாழ்வில் மறுமலர்ச்சியை தந்திட்ட மனோன் மணியம்!

இளைய சமுதாயமாம் மாணவச் செல்வங்களின்
சிந்தையை சிலிர்க்க வைக்க அட்சயப் பாத்திரம் போல்
கல்வி உதவிகள் பலவற்றை வழங்கும் இவர்
மாணவர்களின் திறனைப் பாராட்டுவதில் திருப்புகழ்!

நிலவில் கால் பதித்த ஆம்ஸ்ட்ராங் சாதனையாளர் என்றால்
உலகில் வெற்றி எனும் கால் பதிக்க போராடும்
மாணவ சமுதாயத்திற்கு ஊக்கமளிக்க ஒவ்வொரு வருடமும்
கோசலை தங்கப் பதக்கம் மடிக்கணினி விருதுகளை
வழங்கி வரும் இவர் மகா சாதனையாளர்தானே!

ஏழைக் குடும்பங்களை கோபுரமாக்க வங்கிக்கடன், சங்கக்கடன்,
ஐ.வி.டி.பி கடன்களை வழங்கும் ஏழைப்பங்காளரே!
கல்மனதையும் கரையச் செய்யும் திருவாசகம் போல்
உறுப்பினர்களை இழந்து வாடும் குடும்பத்தினருக்கு
வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி வழங்கும் தர்மசீலரே!
நோய் நொடியில்லாச் சமுதாயம் காண வேண்டி
சுகாதாரப் பொருட்கள் புற்றுநோய் சிகிச்சை வழங்கி உதவும்
கற்பக விருட்சமே!

இவர் ஏழை எளிய மக்களுக்கோ கொஞ்சும் கிள்ளை
விஞ்சு புகழ் கொண்டதற்கோ எல்லை இல்லை
துஞ்சலிலாப் பணியெல்லாம் இமயம் தாண்டும்
தொட்டதெல்லாம் துலங்கியவை விண்ணைத் தாண்டும்
சாதனையாய் செய்தவைகள் எண்ணில் வாரா!
சரித்திரமாய் படைத்தவைகள் எழுத்தில் தீரா!
உம் பணியைப் பார்த்து பாரெல்லாம் வியக்கும்!
வருகின்ற தலைமுறையும் உம்மை வாழ்த்தும்!!!

**மு.சத்யா**
ஐ.வி.டி.பி தலைமை அலுவலகம்
கிருஷ்ணகிரி.

# வருகைப் புரிந்தவர்கள்...




டிலைட் நிறுவனத்தின் சோலார் விளக்குகளைப் பயன்படுத்துவதில் நிகழும் சமூகத் தாக்கம் குறித்த சான்றிதழ்

வேலூர் அக்சீலியம் கல்லூரியின் வணிக நிர்வாகத் துறை மாணவியரின் களப்பயணம்






பெல்லா நிறுவன மேலாளர் ஐ.வி.டி.பி யின் பணி குறித்த சமூகத் தாக்கச் சான்றிதழ் வழங்கிய தருணம்

திருப்பத்தூர் தூய நெஞ்சக் கல்லூரி சமூகப்பணி துறை மாணவ மாணவியர் வருகை



# உங்களுக்கு தெரியுமா

தமிழகத்தில் 11 பேரில் ஒருவருக்குப் புற்றுநோய் வரும் ஆபத்து காத்திருக்கிறது. 2016-ல் மட்டும் 65,590 புதிய புற்றுநோயாளிகள் கண்டறியப்பட்டுள்ளனர். அதில் 28,971 பேர் ஆண்கள், 36,619 பேர் பெண்கள். இவர்களில் மார்பகப் புற்றுநோய் பாதிப்புள்ளவர்கள் 24.7% பேர், கருப்பை வாய் புற்றுநோய் பாதிப்புள்ளவர்கள் 19.4% பேர். **சென்னை அடையாறு புற்றுநோய் மருத்துவமனை வெளியிட்டுள்ள ஒரு ஆய்வறிக்கை.**

பெண்களிடம் புற்றுநோய் அதிகரிப்பதற்கு மிகச் சிறிய வயதில் பருவமடைவது, தாமதமாகத் திருமணம் செய்வது, தாமதமாகக் குழந்தை பெற்றுக்கொள்வது, தாய் பால் கொடுக்கும் பழக்கம் குறைந்தது போனது, குழந்தை பிறப்பதைத் தள்ளிப் போட நீண்ட காலம் மாத்திரை சாப்பிடுவது ஆகியவை பிரதானக் காரணங்கள்.

இந்தியா முழுவதும் உள்ள அனைத்து நகரங்களிலும் பெண்களுக்கு வரும் புற்றுநோய்களில் 25% முதல் 32% வரை மார்பகப் புற்றுநோய் ஆகும்.

இந்தியாவில் 30 முதல் 50 வயதுக்குட்பட்டவர்களுக்கு மார்பகப் புற்றுநோய் பாதிப்பு அதிகமாக உள்ளது

இந்தியாவில் ஒவ்வொரு 4 நிமிடங்களுக்கும் ஒரு பெண் மார்பகப் புற்றுநோயால் பாதிக்கப்படுகிறார்.



"முடியாது என்ற ஒரு சொல், முடி என்று தானே தொடங்குகிறது.".

## ஐ.வி.டி.பி. சுய உதவிக் குழுக்கள் விபரம் (ஜுலை 2023 வரை)

ஐ.வி.டி.பி. செயல்படும் மாவட்டங்கள்: கிருஷ்ணகிரி, தர்மபுரி. திருப்பத்தூர் & வேலூர்

ஐ.வி.டி.பி.கிளைகள் : **88** ● உதவிக்குழுக்கள்: **15,932** ● சுய உதவிக்குழு உறுப்பினர்கள்: **2,79,992**

ஐ.வி.டி.பி.குழுக்களின் மொத்த சேமிப்பு : **1208.88** கோடி

ஐ.வி.டி.பி. உறுப்பினர்கள் பெற்ற மொத்த இலாபப் பங்கீடு: **816.35** கோடி

## கடன் விவரம்

| விவரம் | மார்ச் 2023 வரை | ஏப்ரல் 2023–ஜுலை 2023 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற மொத்த வங்கிக் கடன் தொகை | ₹ 6171.14 கோடி | ₹ 422.67 கோடி | ₹ 6593.81 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் உள்கடனாக பெற்ற சங்கக் கடன் தொகை | ₹ 4395.82 கோடி | ₹ 83 கோடி | ₹ 4478.82 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் பெற்ற ஐ.வி.டி.பி. கடன் தொகை | ₹ 295.54 கோடி | ₹ 23.40 கோடி | ₹ 318.94 கோடி |
| ஐ.வி.டி.பி. குழுக்கள் சுகாதாரத் திட்டங்களுக்காக பெற்ற கடன் தொகை | ₹ 244.40 கோடி | ₹ 3.67 கோடி | ₹ 248.07 கோடி |
| **மொத்தம்** | ₹ 11106.90 கோடி | ₹ 532.74 கோடி | ₹ 11639.64 கோடி |

## மனித நேயப் பணிகளில் ஐ.வி.டி.பி.

| விவரம் | மார்ச் 2023 வரை | ஏப்ரல் 2023–ஜுலை 2023 | இதுவரை மொத்தம் |
|---|---|---|---|
| கிருஷ்ணகிரி மாவட்ட மலைப்பகுதிகளில் (அஞ்செட்டி, உரிகம். நாட்றாம்பாளையம். தக்கட்டி) 331 தடுப்பணைகள் கட்டியதற்காக | ₹ 5.00 கோடி | | ₹ 5.00 கோடி |
| கூரை வீடுகளை ஓட்டு வீடுகளாக மாற்றியதற்காக (2000 வீடுகள்) | ₹ 2.00 கோடி | | ₹ 2.00 கோடி |
| மருத்துவமனை. சிறைகள் தொழுநோயாளிகள். முதியோர் இல்லம், ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம். கடைநிலைப் பணியாளர்களுக்கான நிலை வைப்பு | ₹ 2.63 கோடி | ₹ 1.00 இலட்சம் | ₹ 2.64 கோடி |
| மறைந்த உறுப்பினர்களின் வாரிசுகள் பெற்ற வாழ்க்கைப் பாதுகாப்பு நிதி | ₹ 53.99 கோடி | | ₹ 53.99 கோடி |
| உறுப்பினர்களுக்கான நலத்திட்டங்கள்: குடிசை தீ விபத்து நிதியுதவி, கோசலை விருது, ஊக்குனர் பரிசு ஏழை உறுப்பினர்களுக்கான வீடு கட்டும் திட்டம், அன்னையர் தினம் பரிசுகள். தையல் பயிற்சிகள், உறுப்பினர்களுக்கான வெள்ள நிவாரணப்பணி. விதவை உறுப்பினர்களின் குழந்தைகளுக்கான கல்வி உதவித் தொகை | ₹ 9.09 கோடி | ₹ 40.50 இலட்சம் | ₹ 9.49 கோடி |
| பணியாளர்களுக்கான ஊக்கப்பரிசு. உதவித்தொகை, சீருடை, மருத்துவச் செலவுகள் | ₹ 8.09 கோடி | ₹ 4.02 இலட்சம் | ₹ 8.13 கோடி |
| ஐ.வி.டி.பி. நேதாஜி பள்ளி. கோட்டையூர். ஐ.வி.டி.பி. கம்ப்யூட்டர் பயிற்சி மையம், அனுமந்தபுரம் மற்றும் புதிய பயிற்சி மையக் கட்டிடம், கிருஷ்ணகிரி ஆகியவற்றின் வளர்ச்சிப் பணிகளுக்காக | ₹ 15.55 கோடி | ₹ 6.00 இலட்சம் | ₹ 15.61 கோடி |
| பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை இதர கல்விப் பணிகள் மற்றும் விளையாட்டு துறைக்கு வழங்கியது. | ₹ 21.51 கோடி | ₹ 31.00 இலட்சம் | ₹ 21.82 கோடி |
| குழந்தைகள் இல்லங்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவி | ₹ 55.11 இலட்சம் | | ₹ 55.11 இலட்சம் |
| கார்கில் போர். குஜராத் பூகம்பம், சுனாமி, தானே புயல், வர்தா புயல். கஜா புயல் நிவாரணம் மற்றும் கேரளா, நீலகிரி, சென்னை வெள்ள நிவாரணப் பணிகளுக்காக | ₹ 4.91 கோடி | | ₹ 4.91 கோடி |
| கொரோனா நோய் நிவாரணப் பணிகள் மற்றும் நிதியுதவி | ₹ 3.72 கோடி | | ₹ 3.72 கோடி |
| இருளர் நிவாரணப் பணிகள் | ₹ 1.22 கோடி | | ₹ 1.22 கோடி |
| **மொத்தம்** | ₹ **128.30** கோடி | ₹ **81.70** இலட்சம் | ₹ **129.08** கோடி |


**ஐ.வி.டி.பி. தொண்டு நிறுவனம்**
(Regd. No. 69/79)
கிருஷ்ணகிரி, தர்மபுரி, திருப்பத்தூர் & வேலூர் மாவட்டங்கள்
ஐ.வி.டி.பி. இல்லம், 9ஈ சாந்தி நகர் 3 வது கிராஸ். கிருஷ்ணகிரி-635 001.
Ph: 04343-232 129, 236 420 e-mail: francis@ivdpkrishnagiri.org Web: www.ivdpkrishnagiri.org